நாள் - 14.05.2026

**CC.No**. 55/2020

**அ.சா.2- வெங்கடேஷ்**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 14$^{th}$ **day of May** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக நாங்கள் எழுத்து மூலமான உத்தரவின் அடிப்படையில் மருத்துவமனைகளுக்கு ஆய்வுகள் மேற்கொள்வோமா என்றால் கால சூழலுக்கு ஏற்றவாறு செல்வது உண்டு. மேலும் வாய்மொழி உத்தரவு அடிப்படையிலும் செல்வோம். இவ்வழக்கு மருத்துவமனைக்கு நாங்கள் சென்றதற்கு எந்தவித எழுத்து மூலமாக உத்தரவுகளும் இல்லை என்றால் அது சம்பந்தமாக தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. எதன் அடிப்படையில் நாங்கள் அன்றைய தினம் ஆய்வுக்கு சென்றோம் என்றால் மாவட்ட ஆட்சியர் மற்றும் இணை இயக்குனர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளிகள் அனுமதிக்க கூடாத நிலையில் அனுமதித்து சிகிச்சை அளித்து வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நாங்கள் அங்கு சென்றோம். மேற்படி மருத்துவமனைக்கு நான் இணை இயக்குனர் மற்றும் வேறு ஒரு மருத்துவர் எங்களுடைய அலுவலக பணியாளர்கள் குழுவாக சென்றோம். என்னுடன் வந்த அலுவலக உதவியாளர்களும் எங்களுடன் மருத்துவமனைக்கு உள்ளே ஆய்வுக்காக வந்தார்களா என்றால் அது சம்பந்தமாக தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை.

நாங்கள் மருத்துவமனைக்கு ஆய்வுக்கு சென்ற பொழுது வெளி நோயாளிகள் பிரிவில் மட்டும் ஒரு மருத்துவர் இருந்தார். உள் நோயாளிகள் பிரிவில் மருத்துவர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஆய்வுக்குச் சென்ற பொழுது எத்தனை நோயாளிகள் உள் நோயாளியாகவும் எத்தனை நோயாளிகள் வெளி நோயாளியாகவும் சிகிச்சைக்காக வந்திருந்தார்கள் என்றால் தற்பொழுது எத்தனை நோயாளிகள் வந்திருந்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனைக்கு ஆய்வுக்கு இணை இயக்குனர் அவர்களுடன் உள்ளே சென்ற பொழுது யாரேனும் நோயாளிகள் சிகிச்சைக்காக இருந்தார்களா என்றால் ஒரு நோயாளி இருந்ததாக ஞாபகம் உள்ளது. மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் உள்நோயாளிகள் பிரிவில் எந்த மருத்துவரும் இல்லை. வெளி நோயாளிகள் பிரிவில் ஒரு மருத்துவர் இருந்தார். மேற்படி ஒரு மருத்துவர் வெளி நோயாளிகள் பிரிவில் இருந்தவர் அவருடைய பதிவு குறித்து ஆய்வுகள் செய்தோமா என்றால் மேற்படி ஆய்வு நான் செய்யவில்லை. இணை இயக்குனர்

செய்திருப்பார்.

இணை இயக்குனர் அவர்கள் உத்தரவின்படி நான் என்ன பணிகள் மேற்படி ஆய்வின் போது மேற்கொண்டேன் என்றால் அங்கு மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு இருக்கும் கோப்புகளை பார்வையிட்டேன். நான் அங்கு என்னென்ன கோப்புகளை பார்வையிட்டேன் கோப்புகள் இருந்தனவா என்றால் அத்தியாவசியமாக பராமரிக்கப்பட வேண்டிய கோப்புகளை கேட்டேன் அங்கு இருந்த பணியாட்கள் மேற்படி கோப்புகள் என்னிடம் சமர்ப்பிக்கவில்லை. உள் நோயாளியாக இருந்தவரின் பெயர் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அது சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை இணை இயக்குனர் விசாரித்தார். இணை இயக்குனர் மேற்படி மருத்துவமனையில் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவர் விசாரித்த பொழுது முழுவதுமாக நான் அங்கு இல்லை. நாங்கள் மருத்துவமனைக்கு ஆய்வு சென்ற பொழுது மேற்படி முகவை மருத்துவமனைக்கு முன்பாக மருத்துவர்கள் அடங்கிய மருத்துவர்கள் பட்டியல் பலகை இருந்தனவா என்றால் மருத்துவர்கள் பெயர் அடங்கிய பலகை இருந்தது அவர்களின் பெயர் ஞாபகம் இல்லை. மேற்படி பலகையில் இருந்த மருத்துவர்தான் அன்றைய தினம் வெளி நோயாளிகள் சிகிச்சை பிரிவில் இருந்தாரா என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் அது சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை.

இணை இயக்குனர் ஆய்வின் பொழுது என்னென்ன ஆவணங்கள் கைப்பற்றினார் என்பது பற்றி விபரம் எனக்கு தெரியாது. இணை இயக்குனர் அவர்களுடன் நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்க உடன் செல்லவில்லை. புகார் அளித்தது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. தலைமை காவலர் விசாரித்தது போல் ஞாபகம் உள்ளது. இணை இயக்குனர் அவர்களிடம் நான் ஆய்வு செய்த விபரத்தை வாய் மூலமாக சொல்லி இயக்குனர் புகாரை கொடுத்தார். நான் எழுத்து மூலமாக இணை இயக்குனர் அவர்களுக்கு எந்த வித அறிக்கை அளித்தவாறு ஞாபகம் இல்லை. நான் எழுத்து மூலமாக அங்கு ஏதும் குறிப்புகள் எடுத்தேனா என்றால் அவர்கள் ஆய்வுக்கு எந்தவித கோப்பையும் அளிக்காததால் நான் எழுத்து மூலமாக எந்தவித குறிப்புகளும் எடுக்க அவசியம் ஏற்படவில்லை. வெளி நோயாளிகள் பிரிவில் அன்றைய தினம் இருந்ததாக சொல்லப்படும் மருத்துவரின் பெயர் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.

நான் போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த பொழுது நாங்கள் குழுவுடன் ஆய்வுக்கு சென்ற பொழுது நான்கு நபர்கள் அங்கிருந்து எங்களை பார்த்து ஓடிவிட்டார்கள் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அங்கு சிகிச்சைக்காக வந்திருந்தவர்கள் ஓடி இருக்கலாம். மேற்படி நான் கோப்புகளை கேட்டு எடுத்து தராமல் இருந்தார்கள் என சொல்லி உள்ள நிலையில் அங்கு பணியில் இருந்ததாக சொல்லப்படும் நபர்கள் யாரும் எங்களை பார்த்து ஓடவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த பொழுது மார்ஷல்முகேஷ் ஆண்டனி மற்றும்

மோகன பாஸ்கர் என இரண்டு மருத்துவர்கள் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. ஒரு வயதான மருத்துவர் மட்டும் இருந்ததாக சொன்னேன். நாங்கள் குழுவுடன் ஆய்வுக்குச் சென்ற பொழுது மேற்படி முகவை மருத்துவமனை வடிவமைப்பில் மட்டும் அதற்கான உட்கட்டமைப்புடன் இருந்ததா என்றால் கட்டமைப்புடன் இருந்தது. ஆனால் முழுவதுமாக இல்லை.

மேற்படி மருத்துவமனையில் ஆய்வின் பொழுது மேற்படி உள்நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்ததற்கான அனைத்து பதிவேடுகளையும் எங்கள் ஆய்வின் பொழுது எங்களிடம் சமர்ப்பித்து உள்ளார்கள் என்றும் ஆவணங்கள் அனைத்தையும் எங்கள் குழுவில் இருந்த இணை இயக்குனர் அவர்களும் பார்வையிட்டார் என்றும் ஆவணங்கள் அனைத்தையும் நாங்கள் பார்வையிட்டு வேண்டுமென்றே மேற்படி ஆவணங்களை கொண்டு வராமல் இணை இயக்குனர் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்றமும் செய்யவில்லை என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி வெளி நோயாளிகள் பிரிவில் ஒரு மருத்துவர் இருந்தார் அவர் தவறு ஏதேனும் செய்தார் என்பது குறித்து எனக்கு தெரியாது. நான் எழுத்து மூலமாக குறிப்புகள் எதுவும் இணை இயக்குனர் அவர்களிடம் அளிக்கவில்லை. எழுத்து மூலமாக குறிப்பு ஏதேனும் எடுத்தனா என எனக்கு ஞாபகம் இல்லை. இணை இயக்குனர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் மேலும் மேற்படி ஆய்வின் போது நான் உடன் இருக்கவில்லை என்றும் ஆகவேதான் என்னென்ன ஆவணங்கள் பார்வையிட்டேன் என்பதற்கான எந்த விபரமும் என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. மேலும் ஆய்வின் பொழுது எத்தனை மருத்துவர்கள் இருந்தார்கள் என்பதற்கான எந்த விபரம் என்னால் குறிப்பாக சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவமனை மருத்துவர்கள் கண்காணிப்பில் உரிய அனுமதி பெற்று நடத்தப்பட்ட மருத்துவமனை என்றால் சரியல்ல. (A4 adopted cross examination of A1to A3).

**Signature of Witness** **(Sd/- T. Arunkumar)**

**Judicial Magistrate,**

**Sulur.**